सत्यमेव जयते

# இந்திய அரசு
# ஜவுளித்துறை அமைச்சக
# திட்டங்களின் கையேடு

## ஜவுளித்துறைக்கான மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள்

## I. மறுசீரமைப்பு செய்யப்பட்ட தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டம் (Revised, Restructured TUFS)

### (RR-TUFS செயல்படும் காலம் - 01.04.2013 முதல் 31.03.2017 வரை)

### RR TUFS மூலம் இந்திய ஜவுளித்துறை நவீனமயமாக்களில் ஆர்வமாக ஈடுபட்டு வளர்ச்சிக்கான பாதையில் செல்கிறது.

1. இந்திய அரசு 12வது ஐந்தாண்டு கால (01.04.2013 to 31.03.2017) தொழில் நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்துக்கான செயல்திட்டம் மற்றும் நிதி நிர்வாகத்துக்கான வரையறைகளை அறிவித்துள்ளது.

2. ஜவுளித்துறையில் உள்ள அனைத்து துணைத்துறைகள் மற்றும் சணல் தொழிலை ஊக்குவிப்பதற்காக 1999ம் வருடத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டம் மூலம் 5% வட்டித் தொகை திரும்பப் பெறும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஏப்ரல் 1999ல் இருந்து மார்ச் 31, 2004 வரை இத்திட்டம் இருந்தது. பின்னர் 2004ம் வருடமும் சில மாற்றங்களுடன் 2007ம் வருடமும் நீட்டிக்கப்பட்டது. மேலும் சில சீரமைப்புகளுடன் 28.04.11 முதல் 31.03.2012 வரை நீட்டிக்கப்பட்டது. பின்னர் 31.03.2013 வரை நீட்டிக்கப்பட்டது. கடந்த 14 ஆண்டுகளில் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தின் பலனாக ஜவுளித்துறையில் முதலீடுகள் அதிக அளவில் ஈர்க்கப்பட்டுள்ளது.

3. 12 வது ஐந்தாண்டு திட்டத்தில் ஜவுளித்துறையை மேம்படுத்தவும், உலக போட்டியை எதிர்கொள்ள ஏதுவாகவும், மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தியை பெருக்கவும், அனைத்து ஜவுளித்துறைகளும் சீரான வளர்ச்சி காணவும் (அ) ஒருங்கிணைந்த உற்பத்தி நிறுவனங்கள் தொடங்க ஊக்குவிக்கும் விதமாகவும், (ஆ) சிறிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் விதமாகவும்,

(இ) நெசவு துறைக்கான இயந்திரங்களுக்கு தவணை முறையில் கொள் முதல் செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## மறுசீரமைக்கப்பட்ட RR TUFSல் நிதி ஒதுக்கீடு மற்றும் செயல்முறைகள் :-

1. 12 வது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட திட்ட நிதியில் இருந்து 26% நூல் உற்பத்தி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (அதாவது ரூ.11,952.80 கோடி)
2. ரூ.300 கோடியில் விசைத்தறிக்கு தவணை முறையில் இயந்திரம் கொள்முதல் செய்ய ஒரு முன்னோடி (Pilot) திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
3. புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை அமைக்க இத்திட்ட செலவில் 10% ஒதுக்கப்பட்டுள்ளது.
4. புதிய நூல் உற்பத்தி ஆலைகளுக்கு முதலீட்டுக்கான உச்சவரம்பு ரூ.250 கோடியாக இருக்கும்.

## பயன்பெறும் துறைகள்

1. பருத்தி ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங்
2. பட்டு ரீலிங் மற்றும் முறுக்கேற்றுதல்
3. கம்பளி பதனிடல், கோம்பிங் மற்றும் கம்பளத் தொழிற்சாலை
4. செயற்கை நூல் இழை பதப்படுத்துதல் மற்றும் முறுக்கேற்றுதல்
5. ஸ்பின்னிங்
6. விஸ்கோஸ் ஸ்டேபிள் இழை (VSF) மற்றும் விஸ்கோஸ் நூலிழை (VFY)
7. நெசவு, பின்னலாடை மற்றும் துணி எம்பிராய்டரி
8. நெசவு அல்லாத துணி (Nonwovens) உட்பட தொழில்நுட்ப ஜவுளிகள் (Technical Textiles)
9. ஆடை/ வடிவமைப்பு ஸ்டுடியோ/ வீட்டு உபயோக ஜவுளி (Made ups) உற்பத்தி
10. இழை, நூல், துணி, ஆடை மற்றும் வீட்டு உபயோக ஜவுளி பதப்படுத்துதல் (Processing)
11. சணல் உற்பத்தி தொழிற்சாலை

## தகுதிபெறும் தொழிற்சாலைகள்

1. ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள (Existing) அல்லது புதிய தொழிற்சாலைகள்
2. நவீனமயமாக்கல் அல்லது விரிவாக்கம்
3. 100% வெளிநாட்டு பங்கு தொழிற்சாலைகள்

## தகுதிபெறும் இயந்திரங்கள்

1. துறைவாரியான பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள இயந்திரங்கள்
2. புதிய இயந்திரங்கள் மட்டும் (பழைய இறக்குமதி செய்யப்பட்ட நாடா இல்லாத விசைத்தறிகள், அதிக வேக நேரடி பாவு இயந்திரம் மற்றும் செக்ஷனல் பாவு இயந்திரம் நீங்கலாக)

## RR TUFS ன் கீழ் கடன் உதவி

வட்டி சலுகை பெறும் காலம் - 7 வருடங்கள் (2 வருடம் கட்டமைப்பு (Moratorium) காலம் உட்பட)

## முகமை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | IDBI | - | ஜவுளித் தொழில் (சிறுதொழில் அல்லாதவை (Non-MSME)) |
| 2. | SIDBI | - | சிறுதொழில் துறை (MSME) |
| 3. | IFCI | - | சணல் தொழில்துறை |
| 4. | முகமை வங்கிகள் (Nodal Banks) | - | 36 பொதுத்துறை வங்கிகள் மற்றும் 6 தனியார் துறை வங்கிகள் |

## RR TUFS – சலுகை/ மானிய விவரங்கள்

### 1. நூற்பாலை

நூற்பாலைகள் 2% வட்டித் தொகை திரும்பப் பெறலாம்.

## 2. நெசவு ஆலை

சிறுதொழில் சார்ந்த ஆலைகளுக்காக புதிய நாடா இல்லா தறிகள் நிறுவ 30% முதலீட்டு மானியம் (MMS) வழங்கப்படுகிறது.

30% MMSல் ஒரு நிறுவனத்திற்கு அதிகபட்ச மானியம் ரூ.1.5 கோடி ஆகும்.

புதிய நாடா இல்லாத தறிகளுக்கு 6% வட்டி திரும்பப் பெறும் வசதியும் 15% முதலீட்டுத் தொகை மானியமும் சேர்த்து வழங்கப்படும்.

பயன்படுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட நாடா இல்லாத தறிகளுக்கு 2% வட்டித் தொகை திரும்ப பெறும் வசதி அல்லது 8% முதலீட்டுத் தொகை மானியம் பெறும் வசதி உள்ளது.

## 3. பதனிடல் (Processing), ஆயத்த ஆடை தயாரிப்பு மற்றும் தொழில் நுட்ப ஜவுளித்துறை

5% வட்டி திரும்ப பெறும் வசதி + 10% முதலீட்டுத் தொகை மானியம்

(அல்லது)

15% முதலீட்டுத் தொகை மானியம்

முதலீட்டு உச்ச வரம்பு ரூ.5 கோடி, மானிய உச்ச வரம்பு ரூ.75 லட்சம் ஆகும்.

## 4. கைத்தறி மற்றும் பட்டுத்துறை

5% வட்டி திரும்பப் பெறும் வசதி + 30% முதலீட்டுத் தொகை மானியம்

## 5. சணல்துறை

- 5% வட்டி திரும்பப் பெறும் வசதி

(அல்லது)

- 15% முதலீட்டுத் தொகை மானியம்

## 6. மற்ற துறைகளுக்கான 5% வட்டி திரும்ப பெறும் திட்டம் அல்லது 15% முதலீட்டு மானியம்

1. பருத்தி ஜின்னிங் மற்றும் பிராஸஸிங்
2. கம்பளி பதனிடல்
3. செயற்கை இழை டெக்ஸ்ரைய்சிங், கிரிம்பிங் மற்றும் முறுக்கேற்றுதல்
4. விஸ்கோஸ் இழை (VSF) மற்றும் விஸ்கோஸ் நூல் இழை (VFY)
5. பின்னலாடை, ஆயத்த ஆடை மற்றும் எம்ப்ராய்டரி
6. நெசவு ஆயத்தநிலை இயந்திரங்கள் (Prepratory)
7. ஆயத்த ஆடை உற்பத்தி
8. கணினி வழி வடிவமைப்பு மையம் மற்றும் டிசைன் ஸ்டுடியோ
9. சணல்துறை

## II. ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்கும் திட்டம்

- ஜவுளி ஆலைகளுக்கான உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை அமைத்தல்.
- இந்த திட்டத்திற்கு திட்ட மதிப்பீட்டின் 40 சதவீதத்தை மானியமாக இந்திய அரசாங்கம் வழங்கும் (அதிகபட்சம் ரூ.40 கோடி).
- இத்திட்டத்தில் தொழில்நுட்ப அபிவிருத்தி திட்டத்திற்குட்பட்ட (TUFS) இயந்திரங்களை நிறுவ வேண்டும்.

## III. மாபெரும் ஜவுளித் தொழில் பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த விசைத்தறி பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Mega Cluster)

- இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஏற்கனவே உள்ள விசைத்தறிப் பகுதியின் (Cluster) வசதிகள், கட்டமைப்புகளை மேம்படுத்தி அதன்மூலம் உற்பத்தித்திறனை அதிகப்படுத்தி சந்தையில் ஒரு மேலோங்கிய நிலையை அடைய உதவி செய்தல்.
- தமிழகத்தில் ஈரோடு மாவட்டம் இத்திட்டத்தின்படி மெகா கிளஸ்டர் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

### நிதிஉதவி

விசைத்தறிப் பகுதியின் தேவைக்கேற்ப நெசவு ஆலைகளுக்கு நேரடியாகவோ அல்லது முதலீட்டுடன் உரிய செயல்திட்ட குழு மூலமாகவோ உதவிகள் வழங்கப்படும் அரசாங்க நிதிஉதவி/ தனியார் பங்களிப்பு - 60 : 40 என்ற முறையில் இருக்க வேண்டும். அதாவது அரசின்ரூ.60 கோடி நிதி பெற ரூ.40 கோடி மதிப்பிலான முதலீடு செய்யப்பட வேண்டும்.

## IV. விசைத்தறிகளுக்கான தொகுப்பு தொழிற்கூட திட்டம்

### தகுதிகள் :

- விசைத்தறி நெசவாளர்கள் தொழில் முனைவோர், மாஸ்டர் வீவர்கள், பதிவு செய்யப்பட்ட விசைத்தறி கூட்டுறவு சங்கங்கள், புதிய தொழில் முனைவோர் (தனியாகவோ அல்லது குழுவாகவோ).
- குறைந்தபட்சம் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட விசைத்தறியாளர்கள்/ தொழில்முனைவோர்.
- தொகுப்பில் உள்ள ஒவ்வொரு தொழில் கூடத்திலும் நான்கு தறிகளுக்கு குறையாமலும் அதேசமயம் மொத்தத் தறிகள் குறைந்த பட்சம் 48 ஆகவும் இருக்க வேண்டும். தறியின்

அகலம் 280செ.மீ.க்கு மேல் இருந்தால் குறைந்த பட்சம் 24 தறிகள் இருக்கலாம்.

- விசைத்தறி தொழிற்கூடத்தில் பாவு இயந்திரம் மற்றும் கஞ்சிபோடும் (sizing) இயந்திரங்கள் ஆகியவற்றையும் நிறுவலாம்.
- ஒரு தொகுப்பில் அதிகபட்சம் 500 தறிகள் வரை அனுமதிக்கப்படும்.

**அனுமதிக்கப்படும் இடப்பரப்பு (ஒரு தறிக்கு)**

- **தானியங்கு தறிகள் (Auto Loom) : 200 சதுர அடி**
- **நாடா இல்லாத தறிகள் : 400 சதுர அடி.**
- அனுமதிக்கப்படும் இடஅளவில் பாவு மற்றும் கஞ்சிபோடும் இயந்திரங்களுக்கு 40% அளவில் இடம் அனுமதிக்கப்படும்
- மொத்த திட்டத் தொகையில் 10% க்கு மிகாமல் இதர கட்டமைப்புகளுக்கு அனுமதிக்கப்படும்

## மானியம்

- தொழில்கூட கட்டிட செலவில் 40% அல்லது அதிக பட்சமாக ஒரு சதுர அடிக்கு ரூ.300 வரை மானியமாக வழங்கப்படும்
- குழுவின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை ரூ.22 லட்சமாகும். (இதர கட்டமைப்புகளுக்கான செலவினங்களையும் உள்ளடக்கியது).

## செயற்குழு (EA)

மாநில அரசு நிறுவனம் / பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் / கம்பெனிகள் சட்டம் 1956 ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம்.

### மானியம் வழங்கும் முறை

- 30 : 30: 20: 20 என்ற விகிதாசாரப்படி நான்கு கட்டங்களாக மானியம் வழங்கப்படும்.

- முதல் இரண்டு தவணை மானியம் கட்டிடத்தின் வளர்ச்சி நிலைகளை பொறுத்து வழங்கப்படும்
- அடுத்த 20 சதவீத மானியம் கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட பின் வழங்கப்படும். அனைத்து இயந்திரங்களும் நிறுவப்பட்டு, திருப்திகரமாக இயங்கிய பின் மீதமுள்ள 20 சதவீத மானியம் வழங்கப்படும்.

## V. ஒருங்கிணைந்த விசைத்தறித்துறைக்கான வளர்ச்சித்திட்டம் (ISPSD)

### i) வாங்குவோர் - விற்போரின் நேரடி சந்திப்பு

ஒவ்வொரு சந்திப்பு நிகழ்ச்சிக்கும், நடத்துகின்ற நகரத்தின் தரத்தைப் (A, B & C) பொருத்து அரசின் நிதி உதவியாக முறையே ரூபாய் 15 லட்சம், 10 லட்சம் & 5 லட்சம் வழங்கப்படும்.

### ii) கருத்தரங்கம்/ பயிலரங்கம்

ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அதன் தேவையை பொருத்து ரூபாய் 10 லட்சம் வரை வழங்கப்படும்.

### iii) பிற விசைத்தறி மையங்களுக்கான சுற்றுலா

இச்சுற்றுலாவில் பங்கு பெறும் ஒவ்வொரு விசைத்தறி நெசவாளருக்கும் நிதி உதவியாக ரூபாய் 3000ம், இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி இரயில் கட்டணமும் வழங்கப்படும்.

## VI. நிறுவப்பட்டுள்ள சாதாரண விசைத்தறிகளை நவீனப் படுத்துவதற்கான முன்னோடித் திட்டம்

நவீனப் படுத்துவதற்கான உபகரணங்கள், உதிரிபாகங்கள், டாபி / ஜக்கார்ட் போன்றவை வாங்குவதற்கான செலவில் 50% தொகை (அதிகபட்சம் ஒரு தறிக்கு ரூபாய் 15,000 வரை) நிதி உதவியாக வழங்கப்படும்.

## VII. தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் விசைத்தறி துறைக்கான தவணை முறைத்திட்டம் (Hire-Purchase Scheme)

- இத்திட்டத்தின் கீழ் இயந்திரங்களுக்கு 30 % மானியம் வழங்கப்படும்.
- பயனாளிகள் சிறப்பு நோக்க குழுவிடம் (SPV) 50% தொகையை பிணை தொகையாக கொடுக்கும் பட்சத்தில் கூடுதல் சலுகையாக 3% முன் பாதுகாப்பு தொகை (Upfront Credit Risk) –ம் வழங்கப்படும்.

## VIII. நூல் வங்கித் திட்டம்

- குறைந்தபட்சம் 11 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறப்பு நோக்க குழு (SPV) அமைக்க வேண்டும்.
- இக்குழு கூட்டுறவு சங்கமாகவோ, அறக்கட்டளையாகவோ அல்லது கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவோ இருக்க வேண்டும்.
- இக்குழு (SPV) நூல் கிடங்கிற்கு ஏற்ற கட்டிடத்தை முடிவு செய்தபின், விரிவான திட்ட அறிக்கையை (DPR) தயாரித்து அரசு நிதியின் ஒப்புதலுக்காக ஜவுளித்துறை ஆணையரிடம் சமா்ப்பிக்க வேண்டும்.
- அரசு பங்கின் 50 % தொகைக்கான 3 வருட கால வங்கி உத்திரவாதத்தின் (Bank Guarantee) பேரில் தான் அரசு பங்கானது குழுவுக்கு வழங்கப்படும்.
- இந்திய அரசு இக்குழுவுக்கு ரூ.1 கோடி வரை வட்டி இல்லாத நிதி வழங்கும்
- அரசிடம் இருந்து பெறப்படும் தொகைக்கு சமமான தொகையை இக்குழு தனது பங்காக முதலீடு செய்ய வேண்டும்.
- இந்த நிதியானது நூல் கொள்முதலுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

- மண்டல ஜவுளித்துறை ஆணையர் அலுவலகமும், குழுவும் கூட்டாக துவங்கும் ஒரு புதிய வங்கி கணக்கின் மூலமாகவே இந்த நிதியின் பண பரிமாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.
- அரசின் நிதி மூன்று ஆண்டுகள் வரை குழுவின் (SPV) பயன்பாட்டிற்கு இருக்கும். அதன்பின் குழுவின் செயல்பாட்டினைப் பொறுத்து மேலும் நீட்டிப்பு வழங்குவது முடிவெடுக்கப்படும்.

## IX. பொது உபயோக மையம்

- பொது உபயோக மையத்தில் ஆடை வடிவமைப்பு மையம், பரிசோதனைக் கூடம், தொழிற்பயிற்சி மையம், தகவல் மற்றும் வர்த்தக சேவை மையம், மூலப்பொருள் மற்றும் விற்பனை பொருட்களுக்கான பொது கிடங்கு வசதி, மாசுநீர் சுத்திகரிப்பு நிலையம், மேலும் பொதுவான பாவு நூல் தயார்ப்படுத்தும் ஆலைகள் (வார்ப்பிங் / சைசிங்) போன்ற வசதிகளை அமைத்துக் கொள்ளலாம்.
- குறைந்த பட்சம் 11 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்பு நோக்க குழு (SPV) ஒன்று அமைக்கப்பட வேண்டும். 50 அல்லது அதற்கு மேல் உள்ள உறுப்பினர்களைக் கொண்ட குழுவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- குழுவானது பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமாகவோ, அறக்கட்டளையாகவோ அல்லது கம்பெனிகள் சட்டம் 1956 கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவோ இருக்க வேண்டும்.
- இக்குழு (SPV) பொது உபயோக மையம், நூல்கிடங்கு உள்கட்டமைப்பு போன்ற வசதிகளை நிறுவுவதற்கான திட்டவரைவை (Project Report) தயாரித்து ஜவுளித்துறை ஆணையரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க வேண்டும்.
- திட்டவரைவை சமர்ப்பிப்பதற்கு முன்பாக திட்டத்திற்கு தேவையான நிலத்தை குழு கையகப்படுத்தியிருக்க வேண்டும்.
- பொது சேவை மையம் அமையவிருக்கும் விசைத்தறி பகுதியின் தரத்தைப் பொறுத்து, அரசு வழங்கும் நிதி உதவியின் அளவு கீழ்க்கண்டவாறு இருக்கும்.

| விசைத்தறி பகுதியின் தரம் (Powerloom Clusters Grade) | அரசு வழங்கும் நிதி உதவியின் அளவு |
|---|---|
| தரம் - A | மொத்த திட்டத் தொகையில் 60% வரை |
| தரம் - B | மொத்த திட்டத் தொகையில் 70% வரை |
| தரம் - C | மொத்த திட்டத் தொகையில் 80% வரை |
| தரம் - D (வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர்) | மொத்த திட்டத் தொகையில் 90% வரை |

- மேலே குறிப்பிட்டுள்ள உதவித்தொகை பெறுவதற்கான திட்டசெலவில் (Project cost), உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்கள், பரிசோதனைக் கூட உபகரணங்கள், இதர முன் செலவினங்கள் மற்றும் 25% வரையிலான கட்டுமான செலவுகள் ஆகியவை உள்ளடங்கும்.
- ஒரு விசைத்தறி பகுதிக்கு(Cluster), நூல் கிடங்குடன் கூடிய பொது உபயோக மையம் அமைப்பதற்கான அதிகபட்ச மானியத் தொகை ரூ.2 கோடி ஆகும்.
- அரசின் மானியத் தொகை கீழ்க்கண்ட தவணை முறையில் வழங்கப்படும்.
- 30 சதவீதத்திற்கு மேற்பட்ட கட்டிட வேலைகள் முடிந்தபின் கட்டிடத்திற்கான மானியத்தின் 30% தொகை வழங்கப்படும்.
- கட்டிடத்தின் 60% பணிகள் முடிவடைந்ததும், முதல் கட்ட மானியத்தை உபயோகத்ததற்கான சான்றிதழை சமர்ப்பித்து இரண்டாம் கட்ட மானியமாக அடுத்த 30 % பெற்றுக் கொள்ளலாம்.
- கட்டிடப் பணிகள் முழுமையாக நிறைவு பெற்ற பின் மீதமுள்ள 40% மானியத் தொகை வழங்கப்படும்.

## X. ஒருங்கிணைந்த பதனிடல் (Processing)மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் 4-6 பிரவுன் பீல்டு (Brown field) மற்றும் 3-5 கீரின் பீல்டு (Green field) திட்டவரைகள் (Projects) நிறுவி தற்போதுள்ள ஜவுளித்துறை குழுமங்களுக்கான தேவைகளை எடுத்துச் சொல்ல முன்மொழிகிறது. இத்திட்டத்தின் கீழ் வரும் தகுதியுள்ள திட்டவரைவுகள் கீழே குறிப்பிட்டவைகளுக்கு பொருந்தும்.

### தகுதி –அ

நீர் சுத்திகரிப்பு, மாசுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தொழில் நுட்பம் (கடல், ஆறு மற்றும் பூஜ்ய திரவம் வெளியேற்றம்-ZLD).

### தகுதி-ஆ

புதுப்பிக்கத்தக்க/ பசுமை தொழில் நுட்பத்துடன் மின் உற்பத்தி நிலையம் போன்ற பொது உள்கட்டமைப்புகள்.

### தகுதி-இ

சோதனைக் கூடங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் போன்ற பொது வசதிகள்.

### நிதியுதவி வழிமுறைகள்

திட்ட செலவினங்கள் 50% வரை மானியமாக வழங்கப்படும். இதன்படி சுத்திகரிப்பு முறைக்கு அதிகபட்சமாக ரூ. 10 கோடி வரையிலும் பழைய பூஜ்ய திரவ வெளியேற்றும் (ZLD) திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ. 75 கோடி வரையிலும் நிதி உதவி பெறலாம். மாசு நீரை கடல் நீரினுள் வெளியேற்றும் திட்டத்திற்கான திட்ட வரைவிற்கு அதிக பட்சம் ரூ.75 கோடி வரை தேவைக்கேற்ப நிதி உதவி புரிய ஆய்வு செய்யப்படும்.

## XI. தொழில் நுட்ப ஜவுளிக்கான தொழில்நுட்ப கொள்கை

### கொள்கை –I

தொழில் நுட்ப ஜவுளி உற்பத்தியாளர்களின் பயன்பாட்டுக்கான சிறப்பு மையங்களின் (COE) உள்கட்டமைப்பு நிறுவுதல் தொடர்பாக அதன் நிலை உயர்த்துதலுக்காக ரூ.25 கோடிக்கு மிகாமல், மத்திய அரசு மானியம் அளிக்கிறது. சிறப்பு மையங்கள் ஒரே இடத்தில் பல்வேறு வகையான சேவைகள் வழங்குமாறு அமைக்கப்பட வேண்டும்.

### கொள்கை-II

1. உள்நாட்டில் தொழில் தொடங்க ரூ.5 லட்சம் அளவிற்கும் அந்நிய நேரடி முதலீட்டிற்கு ரூ 6 லட்சம் அளவிலும் நிதி உதவி செய்யப்படும்.
2. பயிலரங்கம் / கருத்தரங்கம் - தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடத்த நிதியுதவி அளித்தல்.

3. தரம் ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளின் மூலம் இணக்கம் ஏற்படுத்துதல்.
4. நிறுவன வாடிக்கையாளர்களிடம் (Institutional Buyers) உற்பத்திபொருட்களை சந்தைப்படுத்த உதவி செய்யப்படும். (ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அதிக பட்சம் ரூ.20 லட்சம் வரை நிதியுதவி).
5. தொழில்நுட்ப ஜவுளி ஏற்றுமதி மற்றும் விற்பனை வளர்ச்சிக்கான உதவிகள் - நிதியுதவி அதிக பட்சம் ரூ.5 லட்சம்.
6. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஒப்பந்தம் ஒரு திட்டத்திற்கு(Project) ரூ.20 லட்சம் வரை மத்திய அரசு மானியம்.

## XII. ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் (ISDS)

**மனித வள மேம்பாட்டு பயிற்சி – பொது மற்றும் தனியார் துறை (PPP) பங்களிப்புடன் கூடியது.**

### 1. பயனாளிகள்

நூற்பாலை, தறி, பின்னலாடை, பதப்படுத்துதல், ஆயத்த ஆடைகள் ஆகிய அனைத்து பிரிவுகளிலும் நுழைவு/துவக்க நிலை முதல் மேற்பார்வையாளர் நிலை வரையிலான பயிற்சிகள்.

### 2. செயல்படுத்தும் நிறுவனங்கள் பட்டியல்

- பயிற்சி திட்டங்களை பெரிய அளவில் செயல்படுத்தும் அளவு திறன் உள்ள நிறுவனங்கள்.
- உரிய அனுபவம் மற்றும் வசதிகள் உள்ள NGOக்கள்
- ஜவுளித்தொழில் துறை சார்ந்த தொழில்துறை சங்கங்கள் (Industry Associations).

### 3. நிதி

- திட்ட செலவின் 75% வரை நிதியுதவி. (மூலதன மற்றும் இதர செலவுகள்) அதிகபட்சமாக ஒரு நபருக்கு ரூ. 10,000/- வரை இந்திய அரசாங்கம் மூலம் நிதி உதவி.

- செயல்படுத்தும் நிறுவனத்தின் நிதி பங்களிப்பு 25% ஆக இருக்க வேண்டும். (மாநில அரசு, ஜவுளித்தொழில்துறை மற்றவை)

**4. பயிற்சி காலம்**

குறைந்தபட்சம் 4 வாரங்கள்

## ஜவுளித்தொழில் துறையினருக்கான நலத்திட்டங்கள்

### XIII. விசைத்தறி நெசவாளர்களின் குழு காப்பீட்டுத்திட்டம் (GIS)

#### தகுதிகள்

- விசைத்தறி தொழிலாளர் / நெசவாளர்-வயது 18 முதல் 59 வரை
- நெசவு, முறுக்கேற்றுதல், பாவு மற்றும் கஞ்சி போடுதல் ஆகிய வேலைகள் செய்யும் விசைத்தறி தொழிலாளிகள்.
- 4 அல்லது அதற்குக் குறைவாக தறிகள் உள்ள நெசவாளர்.

| பிரீமியம் தொகை | பயன்கள் |
|---|---|
| தொழிலாளியின் பங்களிப்பு<br>வருடத்திற்கு - ரூ.80/-<br><br>அரசாங்கத்தின் பங்களிப்பு<br>வருடத்திற்கு - ரூ.290/-<br><br>LICன் பங்களிப்பு<br>வருடத்திற்கு - ரூ.100 /-<br><br>மொத்த பிரீமியம் தொகை<br>வருடத்திற்கு - ரூ.470 /- | • விபத்தினால் ஏற்படும் மரணம் - ரூ. 1,50,000/-<br>• விபத்தினால் முற்றிலும் வேலை செய்ய இயலாமை - ரூ. 1,50,000/-<br>• விபத்தினால் நிரந்திரமாக சில உறுப்புகள் இழப்பு - ரூ.75,000/-<br>• இயற்கை மரணம் - ரூ.60,000/-<br>• 9,10,11,12,ஆம் வகுப்புகளில் படிக்கும் விசைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.1200/- (ஒரு வருடத்திற்கு)<br>• அதிகபட்சம் இரண்டு குழந்தைகளுக்கு கல்வி உதவி |

## XIV. விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் அதன் சார்ந்த தொழிலாளர்களுக்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

- பிரிமீயம் - ரூ.750/-
  மத்திய அரசாங்கம் - ரூ.565/-
  மாநில அரசாங்கம் - ரூ.185/-
- பயன்கள் (மருத்துவ உதவி)
  உள்நோயாளிகள் (IPD) – ரூ.30,000/- (அதிகபட்சம்)
  வெளி நோயாளிகள் (OPD) – ரூ.7,500/ - (அதிகபட்சம்)
- விசைத்தறி நெசவாளர் பணம் செலுத்த தேவையில்லை.

## XV. ஜவுளி ஆலைத் தொழிலாளர் மறுவாழ்வு நிதித்திட்டம் (TWRFS)

- நிரந்தரமாக மூடப்பட்ட / கலைக்கப்பட்ட (liquidation) செய்யப்பட்ட சிறு தொழில் அல்லாத (Non-SSI) தனியார் ஜவுளி ஆலைகளில் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் இத்திட்டத்தில் வழங்கப்படுகிறது.
- ஜவுளி ஆலைகள் 5-6-1985 க்குப் பிறகு முழுவதுமாக மூடப்பட்டதாக இருக்க வேண்டும்.

### நிவாரண உதவி

தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை மூன்று வருடங்களுக்கு, கீழ்க்கண்ட அடிப்படையில் (அதிகபட்ச பிரதிமாத சம்பளம் ரூ.3500 என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு) வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| **முதல் வருடம்** | **மாத சம்பளத்தில் 75%** |
| **இரண்டாம் வருடம்** | **மாத சம்பளத்தில் 50%** |
| **மூன்றாம் வருடம்** | **மாத சம்பளத்தில் 25%** |

*****